<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

<u>10.02.2026</u>

OS. No. 257/2010

பக்கம் – 11

PW1 – பிரேமா

<u>பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1985ம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. என்னுடைய தந்தை என்னுடைய திருமணத்தை நடத்தி வைத்தார். என்னுடைய திருமணத்தை நடத்தி வைத்தது இரண்டாம் பிரதிவாதி தான் என்றால் தவறாகும். என்னை பள்ளியில் சேர்த்தது என்னுடைய தந்தை தான். 1969 முதல் 1970 ஆம் ஆண்டு வரை நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். மருத்துவமனைக்கு சென்றுவர ஆன போக்குவரத்து செலவுகளையும் மருத்துவ பரிசோதனைக்குரிய செலவுகளையும் இரண்டாம் பிரதிவாதி தான் செய்தார் என்றால் தவறாகும் என்னுடைய தந்தை தான் செய்தார். 01.04.1968 முதல் இதுநாள் வரையிலும் நாங்கள் கூட்டுக் குடும்பமாக தான் இருந்தோம் ஒவ்வொரு ஆண் மக்களும் அவரவர் பங்குக்கு கூட்டு குடும்பத்தை நிர்வகிக்க பணம் செலுத்தி வந்தனர். கூட்டுக் குடும்பத்திற்கு மாதம் எவ்வளவு செலவாகும் இந்த விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் எத்தனை பேர் என்றால் 11 நபர்கள் ஆவர். குடும்பத்தில் 12 உறுப்பினர்கள் உள்ளனர் என்றும் 11 நபர்கள் என்று தற்போது வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 12 நபர்கள் எவ்வளவு கூட்டு குடும்ப செலவிற்காக கொடுத்தார்கள் என்றால் அவரவர் தகுதிக்கு ஏற்றார் போல் கொடுத்தார்கள். முதல் பிரதிவாதி மாதம் ரூபாய் 200–ம் பிரதிவாதி ஹரிஹாத் மாதம் 250ம் மூன்றாம் பிரதிவாதி ரமேஷ் பாபு ரூபாய் 200 மாதம் செலுத்தி வந்தனர். நான்காம் பிரதிவாதி அமர்நாத் ரூபாய் 200 செலுத்தி வந்தார். ஐந்தாம் பிரதிவாதி ஆனந்தும் ரூபாய் 200 செலுத்தி வந்தார். 6 மற்றும் 7

பிரதிவாதிகள் எந்த ஒரு பணமும் செலுத்தி வந்ததில்லை. எட்டாம் பிரதிவாதி மாதா மாதம் வீட்டிற்கு வரும் பொழுது ரூபாய் 200 லிருந்து 300 வரை கொடுத்து செல்வார். ஒன்பதாம் பிரதிவாதி எவ்வளவு மாத செலவிற்கு பணம் கொடுப்பார் என்றால் சாட்சி பதிலளிக்காமல் இந்த கேள்விக்கு சம்பந்தமில்லாத பதில்களை சொல்லி நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார். பத்தாம் பிரதிவாதி மாதம் ரூபாய் 200 செலுத்தி வந்தார். தந்தை 1982 ஆம் ஆண்டு காலமானார். சித்தப்பா எந்த ஆண்டு காலமானார் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அப்பாவின் தாயார் குப்பம்மா எப்பொழுது காலமானார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. லட்சுமி செட்டி தாத்தா எந்த வருடம் காலமானார் என்று எனக்கு தெரியாது. சித்தி கனகாம்பரம் எந்த வருடம் காலமானார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணப்படி குடும்பத்தில் கடன் இல்லை என்று தந்தை சொல்லி உள்ளார் என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதி 40 வருட காலமாக கூட்டுக்குடும்பதிற்காக வேண்டி கஷ்டப்பட்டு சம்பாதித்து பணத்தை கொடுத்து வந்தார் என்றால் தவறாகும். முதல் பிரதிவாதி கூட்டுக் குடும்பதிற்காக ரூபாய் 38,000/- கொடுத்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான்காவது பிரதிவாதி கூட்டுக் குடும்பதிற்காக ரூபாய் 12,000/- கொடுத்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 5வது பிரதிவாதி ஆனந்த் கூட்டுக் குடும்பத்திற்காக ரூபாய் 37,600/- கொடுத்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2வது பிரதிவாதி ஆகிய நான் கூட்டுக் குடும்பத்திற்காக ரூபாய் 15,38,000/- கொடுத்தேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய திருமணத்திற்காக வேண்டி திருமண செலவுகளை இரண்டாம் பிரதிவாதி தான் செய்தார் என்றால் தவறாகும் என்னுடைய தந்தை தான் செய்தார்.

தந்தை வயோதியகத்தின் காரணமாக காலம் ஆகிவிட்ட காரணத்தினால் குடும்பத்தில் மூத்த வாரிசு என்ற அடிப்படையில் இரண்டாம் பிரதிவாதி தான் குடும்பத்தின் அனைத்துவித செலவுகளையும் பெண் பிள்ளைகளின் திருமணங்களையும் நடத்தி வைத்தார் என்றும் அதனால் பெண் பிள்ளைகளுக்கு எந்தவித உரிமை பாத்தியதையும் தாவா சொத்துக்களில் கிடையாது என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்